**செய்தி வெளியீடு எண்: 103** **நாள்: 03.11.2020**

**மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநரின் இரங்கல் செய்தி**

கர்நாடக வயலின் இசைக்கலைஞர் பத்மபூஷன் திரு. டி.என்.கிருஷ்ணன் அவர்களின் மறைவு குறித்து மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்களின் இரங்கல் செய்தி பின்வருமாறு:

---

கர்நாடக வயலின் இசைக்கலைஞர் பத்மபூஷன் திரு. டி.என்.கிருஷ்ணன் அவர்களின் மறைவு எனக்கு அதிர்ச்சியையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அளித்தது.

கர்நாடக இசையில், வயலின் இசைக்கலைஞரான பத்மபூஷன் திரு.டி.என்.கிருஷ்ணன் அவர்களது பங்களிப்பு என்பது என்றென்றும் நினைவில் நிற்பவையாகும். இவருக்கு பத்மஸ்ரீ, பத்ம பூஷண் விருதுகளுடன் சங்கீத நாடக அகாதெமி விருது, சங்கீத கலாநிதி விருது, சங்கீத கலாசிகாமணி விருதுகளும் அளிக்கப்பட்டு பெருமைப்படுத்தப்பட்டுள்ளார். சென்னையில் இசைப் பேராசிரியராகப் பணியாற்றிய பின்னர், டெல்லி பல்கலைக்கழகத்தில் இசை மற்றும் கவின் கலைப் பள்ளியின் முதல்வராகவும் பணியாற்றியுள்ளார். 2018 ஆம் ஆண்டில் அவரைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து அவருக்கு 'பவனின் பழம்பெரும் விருது' வழங்குவதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அச்சந்திப்பு மிகவும் அற்புதமான பிணைப்பாக இருந்ததுடன் அத்தருணங்களை நான் மிகவும் மதிக்கிறேன்.

அவரது மறைவு இந்தியாவில் உள்ள மக்களுக்கும், குறிப்பாக உலகம் முழுவதும் உள்ள அனைத்து கர்நாடக இசை ஆர்வலர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அன்னாரை இழந்து வாடும் குடும்ப உறுப்பினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**பன்வாரிலால் புரோஹித்**
**தமிழ்நாடு ஆளுநர்**

---

ராஜ் பவன், சென்னை - 22 ஒம்/-
நாள்: 03.11.2020 கூடுதல் இயக்குநர் (ம.தொ)

**Press Release No:103** **Date:03.11.2020**

## HON'BLE GOVERNOR'S CONDOLENCE MESSAGE

Following is the condolence message given by Thiru. Banwarilal Purohit, Hon'ble Governor of Tamil Nadu on the demise of Padma Bhushan Thiru. T.N.Krishnan, Carnatic Music Violinist.

---

The sad demise of Padma Bhushan Thiru. T.N.Krishnan, Carnatic Music Violinist fills me with shock and profound grief.

Padma Bhushan Thiru. T.N.Krishnan's contribution to Carnatic music, particularly as a violinist will be remembered forever. He was honoured with Padma Shri and Padma Bhushan awards and also awarded with the Sangeet Natak Akademi award, Sangeetha Kalanidhi award, Sangeetha Kalasikhamani awards. He was a Professor of Music in Chennai and later served as a Dean of the School of Music and Fine Arts at the University of Delhi. I had occasion to meet him personally and present him Bhavan's Legendary award in 2018. It was wonderful interaction and I will cherish those moments.

His demise is irreparable loss to the people in India particularly to the all Carnatic music lovers across the globe. I convey my deep condolences to the bereaved members of the family and pray to the Almighty God to rest his soul in peace and give strength to his family to overcome this unfathomable loss.

**BANWARILAL PUROHIT**
**GOVERNOR OF TAMIL NADU**

---

Raj Bhavan, Chennai – 22 Sd/-

Date : 03.11.2020 Addl. Director (PR)